ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA
தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

**வெளியிடுபவர்** புள்ளிவிபரத் திணைக்களம்

**திகதி** 2017 செத்தெம்பர் 15

**இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்(கொ.மு.சு) அளவீடு – 2017 ஒகத்து**

- **தயாரிப்புத் துறை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்** ஒகத்து மாதத்தில் 54.4 சுட்டெண் புள்ளிகளை பதிவு செய்ததுடன் இது 2017 யூலை மாதத்துடன் ஒப்பிடும்போது 0.1 சுட்டெண் புள்ளிகளாலான ஒரு சிறிதளவான அதிகரிப்பாகும். இவ் அதிகரிப்பானது, மாதகாலப்பகுதியில் உற்பத்தி நடவடிக்கைகளில் ஏற்பட்ட மெதுவான செயற்பாட்டாலும் மற்றும் எதிர்காலத்தில் வழங்கப்படுவதற்காக ஏற்கனவே பெற்றுக்கொள்ளப்பட்ட புதிய கட்டளைகளை பூர்த்தி செய்வதற்கான பராமரிக்கப்படுகின்ற மேலதிக இருப்புகளின் காரணமாக கொள்வனவு இருப்பு துணை சுட்டெண்ணில் ஏற்பட்ட அதிகரிப்பினால் உந்தப்பட்டது. நிரம்பலர் வழங்கல் நேரம் பிரதானமாக சில நிறுவனம் சார்ந்த விசேடமான தடைகளினால் நீட்சியடைந்தது. அதிகளவான தொழிலாளர் சுழற்சிவீதத்தினை கணக்கில் கொள்ளும் போது திறனற்ற தொழிலாளர்களின் மாற்றீடுகளில் காணப்பட்ட சிக்கல் தன்மையின் காரணமாக, பிரதானமாக ஆடை சார் துறையில் தொழில்நிலை சுட்டெண் குறைவடைந்து காணப்பட்டது. இருப்பினும், கொ.மு.சுட்டெண்ணின் தொழில்நிலை சுட்டெண்ணை தவிர்ந்த அனைத்து துணைச்சுட்டெண்களும் நடுநிலையான 50.0 அடிமட்டத்திற்கு மேலான பெறுமானங்களை ஒகத்து மாதத்தில் பதிவு செய்து ஒரு ஒட்டுமொத்த விரிவாக்கத்தினை காட்டியது. இதற்குமேலாக, நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பு அடுத்த மூன்று மாதங்களுக்கான மேம்பாடொன்றினை குறித்துக்காட்டியது.

- **பணிகள் துறை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்** 2017 யூலையின் 59.1 சுட்டெண் புள்ளியிலிருந்து ஒகத்து மாதத்தில் 60.1 சுட்டெண் புள்ளிகளை பதிவு செய்தது. பணிகள் துறையானது 2017 யூலையுடன் ஒப்பிடும் போது 2017 ஒகத்து மாதத்தில் தொடர்ச்சியான அதிகரிப்பை குறித்துக்காட்டுவதுடன் இது புதிய வியாபாரங்கள், வியாபார நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்ப்பினால் செலுத்தப்பட்டது. 2017 யூலை உடன் ஒப்பிடும் போது தொழில்நிலை மட்டமானது மெதுவான வேகத்தில் அதிகரித்த வேளையில் நிழுவையிலுள்ள பணிகள் 2017 ஒகத்தில் வீழ்ச்சியடைந்தது. நிதியியல் மற்றும் தொலைத்தொடர்பூட்டல் துறைகள் அவர்களுடைய வாடிக்கையாளர்களுக்கு பணியாற்றுதல் மற்றும் சேவை வினைத்திறனினை மேம்படுத்துதல் போன்றவற்றுக்காக தொழில்நுட்ப அடைவினை அறிமுகப்படுத்துதல் மற்றும் மேம்படுத்துதல் ஊடாக புதிய வியாபாரங்கள் மற்றும் வியாபார நடவடிக்கைகள் விரிவாக்கத்திற்கு பங்களிப்பு செய்தது. வியாபார நடவடிக்கைகளில் தங்குமிடம், உணவு மற்றும் குடிபான துறையும் ஒரு அதிகரிப்பினை அறிக்கையிட்டது. பண்டிகைகளின் கேள்விகள் காரணமாக விதிக்கப்பட்ட விலைகள் சுட்டெண்ணில் பிரதானமாக தங்குமிடம், உணவு மற்றும் குடிபான துறையில் ஒரு அதிகரிப்பு உணரப்பட்டது. இதே வேளையில், தொழிலாளர் செலவிற்கான எதிர்பார்ப்புகள் துணைச்சுட்டெண் 2017 ஒகத்து மாதத்தில் தொடர்ச்சியாக குறைவடைந்து காணப்பட்டது.

| | ஆ/மா | சன | பெப் | மாச் | ஏப் | மே | யூன் | யூலை | ஓகத் | செத் | ஒத் | நவெ | திசெ |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், தயாரிப்பு | 2015 | வி.கி | வி.கி | வி.கி | வி.கி | 67.3 | 57.5 | 55.5 | 56.5 | 53.2 | 57.8 | 54.8 | 57.9 |
| | 2016 | 51.9 | 55.3 | 60.7 | 41.6 | 47.9 | 55.1 | 50.6 | 53.5 | 57.7 | 56.5 | 58.4 | 58.3 |
| | 2017 | 56.2 | 57.1 | 66.5 | 41.8 | 57.9 | 56.1 | 54.3 | 54.4 | - | - | - | - |
| கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், பணிகள் | 2015 | வி.கி | வி.கி | வி.கி | வி.கி | 66.8 | 65.0 | 60.6 | 59.8 | 61.7 | 59.5 | 59.3 | 60.2 |
| | 2016 | 58.0 | 59.3 | 61.6 | 54.7 | 58.1 | 56.3 | 57.8 | 61.2 | 57.7 | 59.3 | 59.7 | 59.8 |
| | 2017 | 57.5 | 57.3 | 60.8 | 54.2 | 55.3 | 59.2 | 59.1 | 60.1 | - | - | - | - |

## கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




## கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்



**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு = 50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.

கொ.மு.சு > 50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.

கொ.மு.சு < 50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.